மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே இதைப்பற்றி கடந்த அரசாங்கத்திலே கேட்டிருந்தால் கொஞ்சம் அதிகமான பணம் கூட ஒதுக்கியிருக்கலாம். அப்போது வேண்டாம் என்று விட்டு விட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசாங்கம் இப்போதுதான் பொறுப்பேற்றிருக்கிறது. எனவே இதற்கான நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளும்.

3. அறிவிப்பு

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1991, (ஆ), (இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்".

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS